வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.09.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 264 பக்கங்கள் : 12

## தேர்தலுக்காக நாடு முழுவதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

### பாதுகாப்பு தரப்புக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அவர் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடந்த தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டத்திலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு தரப்பின ருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வேட்பாளர்களின் பாதுகாப்பு

11

## ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள் ளன என்று தேர்தல் ஆணைக்குழு வின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத் தில் நேற்று வியாழக்கிழமை நடத் திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


நாளை சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 4 மணி வரை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெறவுள்ளது. இதற்காக, 13 ஆயிரத்து 421 வாக்க ளிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம்

11

## 1,750 கோடி டொலர்கள் கடனை மறுசீரமைப்பதற்கு இணக்கம்!

### உலக வணிக கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்டது



கொழும்பு, செப். 20

**இலங்கையின் ஆயிரத்து 750 கோடி டொலர் கடன்களை மறுசீரமைப்பதற்கு சர்வ தேச வணிக கடன் வழங்குநர்களுடன் இணக் கம் நேற்று எட்டப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயல்திட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட நிபந் தனைகளுக்கு அமையவே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.**

சீன அபிவிருத்தி வங்கி யுடன் 330 கோடி டொலர் பெறுமதியான கடன் களை மறுசீரமைக்க இலங்கை இணக்கத்தை எட்டியது. சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு, வணிக கடன்வழங்குநர் கள், சர்வதேச பிணை முறிதாரர்கள் ஆகியோரு டன் ஏற்கனவே எட்டப் பட்ட இணக்கப்பாடுக ளின் மூலம் இலங்கை 1,750 கோடி டொலர்கள் பெறுமதியான கடன் களை மறுசீரமைக்க முடி யும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள் ளது.

இதன்மூலம் வட்டி வீதங்களை குறைப்பதற் கும் நாட்டின் நிதியியல் கட்டமைப்பை உறுதிப் படுத்துவதற்கும் முடியும் என்று எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 21 - ஜூலை 2ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் அரசாங்கம் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவு டன் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலான பேச்சு களை நடத்தியிருந்தது. இந்தப் பேச்சுகளில் சட்ட மற்றும் நிதியியல் ஆலோ சகர்களான கிளிபோர்ட் சான்ஸ், லிஸார்ட், வைட் அன்ட் காஷ், ரொத்ஸ் சைல்ட் அன்ட் கோ ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதி களும் பங்கேற்றிருந்தனர்.

இதேபோன்று இலங் கையின் பிணைமுறி களில் 50 சதவீத பிணைமுறிகளின்

11

## கிளிநொச்சி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதி யில், பன்னங்கண்டி பாலத்துக்கு அருகாமையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 22 வயதான இளை ஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த

11

## திலீபன் ஆவணக் காட்சியகம் நல்லூரில் இன்று திறக்கப்படும்!

யாழ்ப்பாணம், செப். 20

தியாக தீபம் திலீபன் தொடர்பான "பார்த்தீபன் திலீபனாக - திலீபன் தியாக தீபமாக" எனும் கருப் பொருள் கொண்ட ஆவணக் காட்சியகம் இன்று வெள் ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபன் நினைவால யம் முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள், முன் னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த

11

## வடக்கில் 32 ஆயிரம் வீட்டு திட்டம் நிதி மூலத்துக்கு அங்கீகாரமளிப்பு!

கொழும்பு, செப். 20

வடக்கில் தலா 50 இலட்சம் ரூபாய் செல்வில் 32 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்துக்கான நிதி மூலத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சன் பவர் குழுமத்தால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டதுக்கு அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட வங்கி மூலமாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வுள்ள சன் பவர் குழுமம் சுமார் 4 ஆயிரம் ஏக்கர்

11

## தேர்தல் கண்காணிப்பு பணியில் மேலும் 32 கண்காணிப்பாளர்கள்!

### அனுப்பியது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணியில் சகல மாவட்டங்களிலும் குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்கள் 32 பேர் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர் என்று ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்கா ணிப்பு குழு தெரிவித்துள் ளது.

இந்த குறுகிய கால கண்காணிப்பாளர்கள், பிரசாரம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் நடைபெறும் தேர்தல் நடவடிக்கைகள், வாக்க ளிப்பு தினம் மற்றும் வாக் களிப்பு நிலையங் களில் வாக்களிப்பு

11

## அமைதியான தேர்தலை நடத்த சகலரும் ஒத்துழைப்பு தாருங்கள்!



### தேர்தல் கண்காணிப்பு குழு தலைவர்

கொழும்பு, செப். 20

தேர்தல் என்பது மிகப் பரந்துபட்ட செயன் முறையாகும். அது குறித்த சட்டங்கள் நடைமுறை யில் இருக்கின்றன.

எனவே சகல தரப்பினரும் சட்டத்துக்கு மதிப்பளித்து, தத்தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்று வதன் ஊடாக அமைதி யான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த

11

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஏற்பாட்டு பணிகள் யாழ். மாவட்டத்தில் பூர்த்தி!

**தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன்**

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

511 வாக்கெடுப்பு நிலையங்கள் செயல்படவுள்ளன. 4 இலட்சத்து 92 ஆயிரத்து 202 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

21ஆம் திகதி மாலை முதல் யாழ். மத்திய கல்லூரியில் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 45 தேர்தல் விதிமீறல்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)



## கிளிநொச்சியில் சுவரொட்டிகளை அகற்றும் பணி நேற்று ஆரம்பம்!

கிளிநொச்சி, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் சுவரொட்டிகளை கிளிநொச்சியில் அகற்றும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

இதைத் தொடர்ந்து, கிளிநொச்சியில் தருமபுரம் பொலிஸார் வேட்பாளர்கள் விளம்பரங்களுக்காக வைத்திருந்த, பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

# தேர்தல் தொடர்பில் சட்டவிரோத செயலில் ஈடுபட்ட 108 பேர் கைது!

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 108 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்று கூறப்படும் 14 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பொலிஸாருக்கு 464 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில், வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 48 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 316 முறைப்பாடுகளும் அடங்குகின்றன.

மேலும், நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமாக ஒட்டப்பட்ட 66 இலட்சத்து 62 ஆயிரத்து 676 சுவரொட்டிகள் பொலிஸரால் நீக்கப்பட்டுள்ளதுடன் 2 இலட்சத்து 19 ஆயிரத்து 203 சுவரொட்டிகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கட்டப்பட்ட ஆயிரத்து 609 பதாகைகள் பொலிஸரால் நீக்கப்பட்டுள்ளதுடன் 1,176 பேனர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட 1,613 பதாதைகள் பொலிஸரால் நீக்கப்பட்டுள்ளன. 1,632 பதாதைகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சிறுமி துஷ்பிரயோகம் அரச ஊழியர் கைது

முல்லைத்தீவு, செப். 20

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அரச உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் நபரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

விசுவமடு கிழக்கை சேர்ந்த 33 வயதான நபர்மீது சிறுமி அளித்த முறைப்பாட்டை அடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அம்பாறையில் இரு நாட்களில் 11 முறைப்பாடுகள் பதிவாகின

கொழும்பு, செப். 20

அம்பாறை மாவட்டத்தில் இரு நாட்களில் 11 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளன. சுவரொட்டிகள் இதுவரை அகற்றப்படவில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை தொகுதியில் 2 முறைப்பாடுகளும் கல்முனை தொகுதியில் 3 முறைப்பாடுகளும், பொத்துவில் தொகுதியில் 3 முறைப்பாடுகளும் அம்பாறை தொகுதியில் இருந்து 3 முறைப்பாடுகளுமாக 11 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மாவட்டத்திலுள்ள 115 வாக்களிப்பு நிலையங்களில் 115 நிலைகொள் கண்காணிப்பாளர்களையும் 16 நடமாடும் கண்காணிப்பாளர்களையும் ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒரு வாகனம் வீதம் 4 தொகுதியிலும் 4 வாகனங்களில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளது. வாக்கு கணக்கெடுப்பு நிலையத்தில் 10 கண்காணிப்பாளர்கள் கச்சேரியில் இருந்து வாக்கு எண்ண ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து வாக்கு எண்ணி முடியும் வரை கண்காணிப்பில் இருப்பார்கள்.

இதேவேளை, இந்த முறை இரண்டாவது விருப்பு வாக்கு எண்ண வேண்டிய தேவை ஏற்படுமாயின் 15 மணித்தியாலம் தங்கியிருந்து கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள்.

அதேபோன்று நீண்டநாள் கண்காணிப்பாளர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டு அவர்கள் மறைமுகமாக கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்பதுடன் வேட்பாளர்களின் நிதி செலவு தொடர்பாக ஆராய்வதற்கு 3 பேரை நியமித்துள்ளோம்.

தேர்தல் பிரசாரம் நேற்று இரவு 12 மணிவரை முடிவுற்றாலும் மாவட்டத்தில் இரண்டு மணிவரை சில பிரசார கூட்டம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தலைமை காரியாலயத்துக்கு அறிவித்துள்ளேன் அதேபோன்று சுவரொட்டிகள் அகற்றப்படாதுள்ளமை தொடர்பாக பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளேன் - என்றும் கூறினார். (ஐ)

## கடையொன்றிலிருந்து வாக்காளர் அட்டைகள் மீட்பு

சிலாபம், செப். 20

புத்தளத்தில் கடை ஒன்றிலிருந்து 147 வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று புத்தளம் தபால் மா அதிபர் எச். எவ். அமீர் தெரிவித்தார்.

இந்த வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்படாத நிலையில் அந்தக் கடைக்குள் போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, களுத்துறையில் தபால் உத்தியோகத்தர் ஒருவர் விநியோகிக்காமல் வைத்திருந்த 900 வாக்காளர் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 25 ஆயிரம் சிகரெட்களுடன் மட்டக்களப்பு இளைஞர் கைது!

கொழும்பு, செப். 20

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களுடன் மட்டக்களப்பு இளைஞர் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அபுதாபியிலிருந்து நேற்று வியாழக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 5 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்கள் அடங்கிய 25 சிகரெட் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மியன்மார் சைபர் மோசடி குற்றச்செயல்கள் உயர்வு!

கொழும்பு, செப். 20

மியன்மாரில் உள்ள சைபர் மோசடி மையங்களுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் தற்போது அதிகரித்துள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை குறிவைத்து வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாகக் கூறி மனித கடத்தல்காரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய விசாரணைகள் ஓர் ஆபத்தான போக்கை வெளிப்படுத்தியுள்ளது. தாய்லாந்து போன்ற நாடுகளில் அதிக வேதனம் பெறக்கூடிய தொழில்களை வழங்குவதாக உறுதியளித்து பின்னர் நேர்காணல் என்ற போர்வையில் டுபாய் போன்ற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

அங்கிருந்து அவர்கள் வலுக்கட்டாயமாக, மியன்மாரில் உள்ள சைபர் மோசடி மையங்களில் பணிபுரிய வற்புறுத்தப்படுவதுடன், உடல் ரீதியான துன்புறுத்தல் மற்றும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பில் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு சட்டவிரோத இடம்பெயர்வு வழிகளை பயன்படுத்துவதற்கு எதிராக கடுமையான அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

இந்த நிலையில் வேலை தேடுபவர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா வீசாவில் பயணம் செய்ய வேண்டிய வாய்ப்புகளை நிராகரிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## யாழில் பிறந்த மறுநாளே பெண் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், செப். 20

பெண் குழந்தை ஒன்று பிறந்த மறுநாளே உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - நாவாந்துறையை சேர்ந்த செல்டன்புஷ் - ரோசாமேரி என்ற தம்பதியரின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

குறித்த தம்பதியருக்கு கடந்த 17ஆம் திகதி குழந்தை பிறந்தது. ஆனால், மறுநாளான நேற்று முன்தினம் குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

சிசுவின் சடலத்தை உடல் கூராய்வு பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.09.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எவர் வெல்வார் - என்ன நடக்கும்?

நாளை மறுதினம் இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்தல் முடிவுற்றிருக்கும். வெளிவரவுள்ள பெறுபேறுகள் இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டவையாக இருக்கும். தேர்தல் வெற்றியானது. ஒன்றில் இலங்கையை உயர்த்தும் அல்லது இலங்கையை நிர்மூலமாக்கும். இந்தத் தேர்தல் தொடர்பில் வெளித் தரப்புகள் எவ்வாறான ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றன என்பதிலும் தெளிவான நிலைப்பாட்டைக் காண முடியவில்லை. இந்தியா யாரை ஆதரிக்கின்றது என்பது தொடர்பில் ஊகங்கள் நிலவினாலும்கூட அது தொடர்பில் தெளிவான முடிவுக்கு வரமுடியாது. ஏனெனில், எவர் வெல்வார் என்பதைக் கணிக்க முடியாதபோது இந்தியா அவதானமாகவே நடந்து கொள்ளும். ரணில் விக்கிரமசிங்கவை மேற்குலகம் விரும்பினாலும்கூட மக்களை வாக்களிக்கச் செய்வதில் எந்தவொரு வெளித் தரப்பும் மாயாஜாலங்களை புரியமுடியாது.

இந்தப் பின்புலத்தில் ஜனதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும், வெல்பவருடன் பணியாற்றுதல் என்னும் அடிப்படையில்தான் இந்தியா மற்றும் அமெரிக்கா நாட்டம் கொண்டிருக்கும். ஏனெனில், ஒருவரை ஆதரிக்கப் போய் அவர் ஒருவேளை தோல்வியடைந்தால் அதன் பின்னர் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். அதேபோன்று தோல்வியடைபவரும் பலமான நிலையில் பாராளுமன்றத்தில் இருப்பாராயின், அதன் பின்னர் இந்திய - அமெரிக்க நலன்களை முன்னெடுப்பதில் பல சோதனைகளை சந்திக்க நேரிடும்.

மொத்தத்தில், ஜனாதிபதித் தேர்தல் புதிர்கள் நிறைந்த ஒரு தேர்தலாகவே இருக்கப் போகின்றது. இந்தத் தேர்தல் முடிவுகள் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை எவ்வாறு பாதிக்கும்? பாதிப்பதற்கான வாய்ப்பிருக்கின்றதா? நிச்சயமாக இல்லை. ஏனெனில், இதில் எவர் அதிகாரத்துக்கு வந்தாலும்கூட தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் எப்போதும்போல்தான் நகரப் போகின்றது. எந்தவோர் அதிசயமும் நடந்துவிடாது. அதேவேளை, எந்தவோர் அதிசயத்தையும் வரப்போகும் ஜனாதிபதியால் நிகழ்த்திவிடவும் முடியாது. ஏனெனில், வெற்றி பெறப் போகிறவர் மைத்திரிபால சிறிசேன நிலையில்தான் இருப்பார்.

2015இல் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றபோது சொற்ப வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருந்தார். ஆனால், பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவை மகிந்த ராஜபக்ஷவே பெற்றிருந்தார். இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவால் எதனையும் செய்ய முடியவில்லை. ஏனெனில், அனைத்தையும் குழப்புவதற்கான சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவை மகிந்த பெற்றிருந்தார். அவ்வாறானதொரு நிலைமைதான் தற்போதும் தெரிகின்றது. ஒருவேளை சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றாலும்கூட பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவை அவர் பெற்றிருக்கமாட்டார். அநுரகுமார திஸநாயக்க சிங்கள பெரும்பான்மையை பெற்று தோல்வியடைந்தாலும்கூட அநுரகுமார திஸநாயக்கவே தென்பகுதியைத் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டவராக இருப்பார். இந்த நிலையில் சஜித் பிரேமதாஸ எதனையும் செய்யாது வழமைபோல் கதைகள் சொல்லும் ஜனாதிபதியாகவே இருப்பார்.

தமிழ் மக்களின் நிலைமை வழமைபோல் இலவுகாத்த கிளியாகவே முற்றுப்பெறும். இந்த நிலைமையிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது என்று மட்டும்தான் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் தேர்தல் நாளில் கண்காணிப்பு பணியில்!

யாழ்ப்பாணம், செப். 20

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும்முகமாக களப் பணிகளில் மனிதவ உரிமைகள் ஆணைக்குழுவினர் ஈடுபடவுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, "ஜனாதிபதித் தேர்தல் - 2024" கண்காணிப்பு நடவடிக்கையை எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும், தேவை ஏற்படின் குறித்த இடத்துக்கு களப்பயணம் மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கடமையிலிருப்பார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகமும் எதிர்வரும் 21ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு கடமைகளுக்காக திறந்திருக்கும். அத்துடன், வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதில் ஏதேனும் உரிமை மீறலை எதிர்கொண்டால் 021-222 2021 மற்றும் 070-365 4910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## சந்தேகத்தால் மனைவியின் கைகளை வெட்டிய கணவன்

### யாழிலேயே இந்தக் கொடூரம்

யாழ்ப்பாணம், செப். 20

கணவனால் இரு கைகளும் வெட்டப்பட்ட நிலை யில் பெண் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மனைவிக்கு வேறொருவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டே தனது மனைவியின் கைகளை கணவர் வெட்டினார் என்று கூறப்படுகின்றது.

அளவெட்டியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சந்தேகநபரான கணவர் அண்மையில் மலேசியாவிலிருந்து நாடு திரும்பியிருந்தார். அவர் தனது மனைவிக்கு வேறொருவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகித்துள்ளார். இது தொடர்பில் இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மனைவி ஒருவருடன் கைபேசியில் காணொலி உரையாடலை மேற்கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து கணவன் மனைவியுடன் முரண்பட்டுள்ளார். முரண்பாடு முற்றிய நிலையில் கணவன் மனைவியின் இரு கைகளையும் வெட்டியுள்ளார்.

கைகள் வெட்டப்பட்ட பெண்ணை அயலவர்கள் உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் ஒரு கை துண்டாடப்பட்டதுடன், மற்றைய கையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவமனை வட்டா ரங்கள் தெரிவித்தன.

## புத்தளம் விபத்தில் இருவர் உயிரிழப்பு

சிலாபம், செப். 20

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து வீதியில் நின்றிருந்த லொறியுடன் மோதி, பின்னர் மற்றொரு லொறியுடனும் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

இதில், பேருந்தின் மிதிபலகையில் பயணித்த இருவர் வீழ்ந்தனர். வீழ்ந்தவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

## யானை தாக்கி ஆசிரியர் காயம்!


முல்லைத்தீவு, செப். 20

காட்டு யானை தாக்கியதில் காயமடைந்த ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்ற வியாழக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளையில் இருந்து கேப்பாபிலவு வீதியால் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த வரை புதுக்குடியிருப்பு - கள்ளியடியில் நின்றிருந்த யானை அவரை தூக்கி வீசியதாகக் கூறப்படுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டும்.

**இடபம்**

பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். உடல் அசதி சோர்வு வந்து விலகும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**

உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள்.விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். அத்தியாயம் தொடங்கும்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**

மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**

விஐபிகள் அறிமுகமாவார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**விருச்சிகம்**

நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள்கை ஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**

பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடிவருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். ஆடை ஆபரணம் சேரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

# மத்திய பா. ஜ. க. அரசுக்கு தி. மு. க. ஆதரவு வழங்கும்

## நாம் தமிழர் கட்சியின் சீமான் தெரிவிப்பு

புதுக்கோட்டை, செப். 20

மத்திய பா. ஜ. க. அரசுக்கு தி. மு. க. ஆதரவு வழங்கும் நிலை உருவாகலாம் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"என்னைப் பொறுத்தவரை தேசியம், திராவிடம் பேசுவோருடன் கூட்டணி கிடையாது. எனது கொள்கைக்கு உடன்பட்டு, கூட்டணி அமைப்பதை விஜய்தான் தீர்மானிக்க வேண்டும். 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் தனித்துதான் போட்டியிடுவேன். நிதிஷ்குமாரும், சந்திரபாபு நாயுடுவும் ஆதரவை விலக்கிக் கொண்டால், மத்திய பா. ஜ. க. அரசுக்கு தி. மு. க. ஆதரவளிக்கும் நிலை உருவாகும்.

நான் சர்வாதிகாரியாக செயல்படுவதாக கட்சி நிர்வாகிகள் சிலர் குற்றஞ்சாட்டியது குறித்து கேட்கிறீர்கள். மரத்தில் இருந்து காய்ந்துவிழும் இலைகள் 'சலசல' என்ற சப்தத்துடன்தான் கீழே விழும். காய்ந்த இலைகள் உதிர்ந்தால்தான், புதிய இலைகள் துளிர்க்கும்" என்றார். (எ)

# இயக்குநர் அமீர் உட்பட 12 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

சென்னை, செப். 20

சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக தி. மு. க. முன்னாள் நிர்வாகி ஜாபர் சாதிக் மீதான அமுலாக்கத் துறை வழக்கில் திரைப்பட இயக்குநர் அமீர் உட்பட 12 பேருக்கு எதிராக முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அமுலாக்கத் துறை தரப்பு சட்டத்தரணி, 302 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தார்.




அதில், ஜாபர் சாதிக், அவரது மனைவி அமீனாபானு, ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது சலீம், திரைப்பட இயக்குநர் அமீர் மற்றும் ஜாபர் சாதிக்கின் படத் தயாரிப்பு நிறுவனம் உள்ளிட்ட 8 நிறுவனங்கள் என மொத்தம் 12 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களின் சொத்துகளையும் பறிமுதல் செய்து முடக்கவும் அனுமதி கோரப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகையில் 12ஆவது நபராக சேர்க்கப்பட்டுள்ள திரைப்பட இயக்குநர் அமீர் மீதும் சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (எ)

# "போதைப்பொருட்களை ஒழிப்பதற்கு டி. ஜி. பி. தலைமையில் சிறப்பு படை"

சென்னை, செப். 20

"தமிழ்நாட்டை கஞ்சா போதை எனும் பெரும் ஆபத்து சுற்றிவளைத்திருக்கும் நிலையில் பொலிஸாரும், அரசும் இப்போதாவது விழித்துக் கொள்ள வேண்டும். பொலிஸ் தலைமை இயக்குநர் (டி. ஜி. பி.) தலைமையில் சிறப்புப் படை ஒன்றை அமைத்து கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்" என பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ் நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் விற்பனையும், பயன்பாடும் அச்சமூட்டும் வகையில் அதிகரித்து வருகிறது. இளைஞர்களிடமிருந்த கஞ்சா போதைப் பழக்கம் இப்போது பாடசாலை மாணவர்களுக்கும் தொற்றிக் கொண்டுவிட்ட நிலையில் அதைத் தடுக்க வேண்டிய தமிழக அரசும், பொலிஸாரும், போதைப் பொருட்களின் விற்பனைக்கு மறைமுகமாக ஆதரவளித்துக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும்"- என்றுள்ளது. (எ)

# "தி. மு. க. ஆட்சிக்கு 2026 தேர்தலில் முடிவுரை"

சென்னை, செப். 20

"2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தி. மு. க. ஆட்சிக்கு மக்கள் முடிவுரை எழுதுவார்கள்" என்று பா. ஜ. க. மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்தார்.



"2024 மக்களவைத் தேர்தலின்போது அந்தக் கட்சி கொடுத்த வாக்குறுதிகளையும் சேர்த்தால் தி. மு. க. ஓர் அரசியல் கட்சியா? அல்லது ஏமாற்று கட்சியா, என்ற கேள்வி ஒவ்வொரு தமிழரின் மனதிலும் எழுவதை தவிர்க்க முடியாது. தொடர் வரி விதிப்பு, திறமையற்ற நிர்வாகம், வாக்குறுதிகளை நிறைவேற்றாதது, நிறைவேற்றிவிட்டதாக பொய் பேசுவது, ஒவ்வொரு துறையிலும் அதிகரித்திருக்கும் ஊழல் போன்றவற்றால் தமிழக மக்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். வரும் தேர்தல் தி. மு. கவுக்கு முடிவுரை எழுதும் தேர்தலாக நிச்சயம் இருக்கும். தமிழக மக்கள் இதை சாதிப்பார்கள். ஏமாற்றியே ஏற்றம் கண்டவர்கள் 2026இல் தோற்றுப் போவார்கள் என்பது நிதர்சனம்" என்று தமிழிசை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை சனிக்கிழமைவரை அமைதிக் காலம் அமுலில்!

## கூறுகிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, செப். 20

**நேற்று முன்தினம் நள்ளிரவுடன் தேர்தல் பிரசார கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டில் தற்போது அமைதி காலம் அமுலில் இருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

நாளை சனிக்கிழமை வரையில் இந்த அமைதி காலம் நடைமுறையில் இருக்கும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் தேர்தல் பிரசாரம், பேரணி, துண்டுப் பிரசுர விநியோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எந்தவொரு வாக்காளரையும் குறிப்பிட்ட நபருக்கு வாக்களிக்குமாறு அல்லது தேர்தலைப் புறக்கணிக்குமாறு அச்சுறுத்தல் விடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்குமாயின், அதற்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம், விருந்து உபசாரங்களை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக கையூட்டல் தொடர்பான சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படும்.

இதேவேளை நாடாளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களின் 13,314 தேர்தல் செயற்பாட்டுக் காரியாலயங்கள் நேற்று நள்ளிரவுடன் அகற்றப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் காணப்படும் தேர்தல் செயற்பாட்டுக் காரியாலயங்களும் அகற்றப்படவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தல் கடமைகளுக்கு 1,358 இ.போ.ச. பஸ்கள்!

## வாக்களிக்கச் செல்வோருக்காக விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு

கொழும்பு, செப். 20

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் கடமைகளுக்காக 1,358 பஸ்கள் வழங்கப்பட உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய அந்த பஸ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

மேலும் தேர்தல் தொடர்பான பொலிஸ் பணிகளுக்காக 175 பஸ்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை, வாக்களிப்பதற்காக கிராமங்களுக்குச் செல்லும் மக்களின் வசதிக்காக விசேட தொலைதூர பஸ் சேவையொன்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் விசேட ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றும் நாளை 21ஆம் திகதியும் கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலும், இன்று மற்றும் 22ஆம் திகதிகளில் காங்கேசன் துறையில் இருந்து கொழும்பு வரையிலும் இந்த ரயில் சேவையில் ஈடுபடவுள்ளதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குப்பி விளக்கு பற்றியதில் யாழ். மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 20

குப்பி விளக்கில் இருந்து ஆடையில் தீ பற்றியமையால் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் பகுதியை சேர்ந்த நிக்லஸ் பிள்ளை வல்லமரி (வயது 88) எனும் மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி இரவு வீட்டின் வெளியே குப்பி விளக்குடன் சென்றபோது, விளக்கின் தீ ஆடையில் பற்றிக்கொண்டது. அதனை அடுத்து வீட்டார் தீயை அணைத்து, மூதாட்டியை காப்பற்றி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# ஆடைத் தொழிற்சாலையில் உணவு விஷமானதில் 500இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில்!

கொழும்பு, செப். 20

பொலனறுவை, பக்கமூன பிரதேசத்தில் உள்ள பிரதான தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் ஐநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்றுக் காலை உணவு விஷமடைந்ததன் காரணமாக சுகவீனமடைந்த நிலையில் பக்கமூன, அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பக்கமூன பொலிஸார் தெரிவித்தனர்.

நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்கள் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பஸ்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் மூலம் பக்கமூன பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

பக்கமூன பிரதேச வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை காரணமாக அதிகளவானோர் பஸ்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் மூலம் அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

அத்தனகடவல மற்றும் பக்கமூன வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட ஆடைத் தொழிலாளர்கள் மற்றும் பணிப் பெண்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் அவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் பக்கமூன மற்றும் அத்தனகடவல வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# இரகசியமாகக் குழந்தை பிரசவித்த 15 வயது சிறுமி

## குடும்பஸ்தர் ஒருவர் கைது

கொழும்பு, செப். 20

மூன்று பிள்ளைகளின் தந்தையினால் வன்புணர்வுக்கு உள்ளான 15 வயதுச் சிறுமி தனியார் வைத்தியசாலையில் சிசுவை பிரசவித்து தத்தெடுப்புக்கு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, வன்புணர்வு செய்த நபரை அடையாளம் கண்டு மிதிகம பொலிஸார் கைது செய்வதுள்ளனர்.

சிறுமி பலாத்காரம் செய்யப்பட்டு கர்ப்பமாகி பிரசவத்துக்கு தயார்படுத்தியதை சிறுமியின் பெற்றோர் மறைத்துவிட்டு, பிரசவத்திற்குப் பின் சட்டத்தரணியின் உதவியுடன் குழந்தையை வேறு தரப்பினருக்கு தத்துக் கொடுக்க தயாராகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுமிக்கு 15 வயது 10 மாதங்கள். வெலிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 30 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத நேரத்தில் பத்து மாதங்களுக்கு முன்னர் சிறுமியை வன்புணர்வு செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எனினும் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சிறுமியின் பெற்றோரோ அல்லது வேறு எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை.

பின்னர், கொழும்பு பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டு பிரசவத்திற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. சிறுமிக்கு குழந்தை பிறந்துள்ளது. சட்டத்தரணிகள் ஊடாக சிசுவை வேறு நபருக்கு மாற்ற முற்பட்டவேளையில் வைத்தியசாலை தகவல் மூலம் நாரஹேன்பிட்டி பொலிஸாருக்கு இது தெரியவந்துள்ளது.

இதன்படி, நாரஹேன்பிட்டி பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது, மிதிகம பிரதேசத்தில் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதன்படி விசாரணைகள் மிதிகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுமியை வன்புணர்வு செய்த மூன்று பிள்ளைகளின் தந்தையை மிதிகம பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்தனர். சம்பவத்தை மறைக்க முயன்ற சந்தேக நபரின் சகோதரி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறுமியின் வீட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து அச்சுறுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குழந்தை பிறந்த தகவலை பொலிஸாரிடம் இருந்து மறைத்த குற்றச்சாட்டின் பேரில் சிறுமியின் தாயும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# தென்னக்கோன் மீதான தடை உத்தரவை நீக்குமாறு கோரிய மனு நிராகரிப்பு

கொழும்பு, செப். 20

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மாஅதிபராக செயற்படுவதை தடுத்து பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனு நேற்று முன் தினம் உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி பெல்லன்வில தம்மரத்ன தேரர், கொள்ளுப்பிட்டி ராஹூல மற்றும் கலாநிதி அகலகட சிறிசுமன தேரர் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட சிலர் தாக்கல் செய்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டதை தொடர்ந்து, தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மாஅதிபராக செயற்படுவதை தடுத்து கடந்த ஜூலை 24ஆம் திகதி உத்தரவிடப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவினால் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் உத்தரவு பிறப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை நீக்குமாறு கோரி இந்த இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ)

# வாக்காளர் அட்டை மாதிரியை இணையவழியில் பெறமுடியும்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்காளர் அட்டைகளை சரிபார்க்கவும், வாக்காளர் அட்டை மாதிரியைப் பெற்றுக்கொள்ளவும் இணையவழி முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க, தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இனையத்தளத்திற்குள் உட்பிரவேசித்து தேருநர் பதிவு விவரம் தேடல் மூலம் வாக்களர் அட்டைகளை பா[illegible] யிடலாம்.

வாக்களிப்பதற்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை இதுவரை பெறாத வாக்காளர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட வாக்களிப்பு [illegible]

வாக்காளர்களுக்கு வாக்காளர் அட்டை கிடைக்காவிடில் அருகில் உள்ள தபால் நிலையங்களை அணுகி விநியோகிக்காமல் இருக்கும் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது www.elections.gov.lk என்ற இனையத்தளத்திற்குள் உட்பிரவேசித்து தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்காளர் அட்டை மாதிரியைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வரலாற்றில் அதிகளவு சுவரொட்டி வவுனியாவில் பதிவு

## 25,000 இற்கும் மேற்பட்டவை அகற்றப்பட்டன



வவுனியா, செப். 20

**தேர்தல் வரலாற்றில் வவுனியா பிரதேசத்தில் அதிகளவான சுவரொட்டிகள் அகற்றப்பட்டமை இதுவே முதல் தடவை என வவுனியா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.**

வவுனியாவில் மாநகர சபை மற்றும் ஏனைய கூலித்தொழிலாளர்களால் ஒட்டப்பட்டிருந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சுவரொட்டிகளை வவுனியா பொலிஸார் தேர்தல் பிரசாரம் முடிவடைந்த தினத்தன்று அகற்றியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளிலிருந்து வவுனியா பிரதேசத்தில் ஒட்டப்பட்டிருந்த 25,000 இற்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் பொலிஸாரின் தலையீட்டினால் அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா நகரில் சுற்றித்திரியும் ஆடு மாடுகள் அதிகளவான சுவரொட்டிகளை தின்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் ஒட்டப்பட்டிருந்த வர்த்தக சுவரொட்டிகளின் மேல் அரசியல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதன் காரணமாக அரசியல் சுவரொட்டிகள் அகற்றப்பட்டபோது, பெருமளவிலான வர்த்தகச் சுவரொட்டிகளும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுன்னாகத்தில் கிருமித் தொற்றினால் 16 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 20

சுன்னாகம் பகுதியில் கிருமி தொற்றினால் 16 நாட்களேயான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தாய் குழந்தையை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில், குழந்தைக்கு தாய் பால் ஊட்டிய வேளை, பால் குழந்தையின் வாயில் இருந்து வெளியே வந்துள்ளது.

அதனையடுத்து தாயும் குழந்தையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், குழந்தை 16ஆம் திகதி உயிரிழந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனையின் போது கிருமி தொற்றே உயிரிழப்புக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# தேர்தலுக்கான பாதுகாப்புக்கு 63,000 பொலிஸார் கடமையில்!

கொழும்பு, செப். 20

தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 63,000 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஒன்றுகூடல்களை நடத்துவது மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாடு முழுவதிலும் ஒட்டப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்ட நெடுந்தாரகை படகு

யாழ்ப்பாணம், செப். 20

நெடுந்தாரகை பயணிகள் படகை, வடக்கு மாகாண ஆளுநர் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் உத்தியோகபூர்வமாக நேற்று கையளித்தார்.

அதற்கிணங்க இதுவரை காலமும் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருட காலமாக சேவையிலீடுபடாதிருந்த நெடுந்தாரகை பயணிகள் படகு 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டு நேற்று பயணத்தை ஆரம்பித்திருந்தது.

நெடுந்தீவு இறங்குதுறைக்கு சென்ற வட மாகாண ஆளுநர் போக்குவரத்தை கண்காணித்ததுடன் படகை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்திருந்தார்.

நேற்று முதல் பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு தினமும் நெடுந்தீவில் இருந்து ஒரு தடவை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு பயணிக்க உள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கெஹலியவின் மகனுக்குச் சொந்தமான 2 சொகுசு வீடுகளை முடக்கிய நீதிமன்று

கொழும்பு, செப். 20

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகனும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரருமான ரமித் ரம்புக்வெலவுக்கு சொந்தமான இரண்டு அதிசொகுசு வீடுகளை கொழும்பு மேல் நீதிமன்றம் முடக்கியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவினால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்னவினால் இந்த உத்தரவு நேற்று வியாழக்கிழமை பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெல்ல கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் 80 மில்லியன் மற்றும் 65 மில்லியன் ரூபாய்களுக்கு இரண்டு அதிசொகுசு வீடுகளை வாங்கியுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் விசாரணைகள் முடிவடையும் வரை இந்த 2 அதிசொகுசு வீடுகளையும் பயன்படுத்தத் தடை விதிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக் குழுவினால் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை இந்த இரண்டு அதிசொகுசு வீடுகளையும் பயன்படுத்துவதற்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 45 தமிழக மீனவர்களுக்கு பத்து கோடி ரூபா அபராதம்

## புத்தளம் நீதிமன்றம் விதித்தது

கொழும்பு, செப். 20

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 35 நாட்டுப் படகு மீனவர்கள், 10 விசைப் படகு மீனவர்கள் என 45 தமிழக மீனவர்களுக்கு மொத்தம் பத்துக் கோடி ரூபா அபராதம் விதித்து புத்தளம் நீதிமன்றம் நேற்று முன் தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருகே பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற அலெக்ஸ், ரஞ்சன், சாள்ஸ், சூசை மார்டின் ஆகியோருக்குச் சொந்தமான நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 35 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த ஒகஸ்ட் 8 ஆம் திகதி கைது செய்தனர்.

35 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு புத்தளம் மாவட்டம் வாரியபொல சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்

மீனவர்களின் காவல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 35 மீனவர்களும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி விமலரத்னா, நீளமான ஒரு நாட்டுப் படகிலிருந்த 12 மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதமும், மற்ற மூன்று நாட்டுப் படகிலிருந்த 23 மீனவர்களுக்கு தலா ரூ.10 இலட்சம் அபராதமும் விதித்தார். அபராதத்தைக் கட்டத் தவறினால் மூன்று மாதம் சிறைத் தண்டனை விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்திலிருந்து அந்தோனி தேன் டெனிலா என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி விசைப்படகில் கடலுக்குச் சென்ற 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு புத்தளத்தில் உள்ள வாரியபொல சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 10 மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆக, 45 தமிழக மீனவர்களுக்கு ரூ.10 கோடி (இந்திய மதிப்பில் ரூ 2.76 கோடி) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

35 தமிழக நாட்டுப் படகு மீனவர்கள் கொழும்பில் உள்ள மிரிஹான முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 10 மீனவர்கள் புத்தளம் வாரியபொல சிறையில் அடைக்கப்பட்டனர். (அ)

# 150 மில்லியன் ரூபாய் மோசடி செய்த பெண்!

## கைது செய்ய பொதுமக்களின் உதவியை நாடும் சி.ஐ.டியினர்




கொழும்பு, செப். 20

விசாரணைக்காக தேடப்படும் ஒரு சந்தேக நபரை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

150 மில்லியன் ரூபா பெறுமதியான காணிக்கு பொய்யான ஆவணங்களை தயாரித்து சொத்து சுவீகரித்தமை தொடர்பில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிரான முறைப்பாடு தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் உரிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, குறித்த பெண் வேறு ஒருவரைப் போன்று பாவனை செய்து போலியான பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் பின்வரும் இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு - 011 243 4504 குற்றப் புலனாய்வுத் திணைக்கள நடவடிக்கை அறை - 011 242 2176.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறை ஊழியருக்கு விசேட விடுமுறை அறிவிப்பு

கொழும்பு, செப். 20

**ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு அனைவருக்கும் விடுமுறை வழங்குவது கட்டாயம் என்று அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விடுமுறை தொடர்பிலும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.**

இதன்படி, 40 கி.மீ. அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அரை நாள் விடுமுறை, 40 - 100 கிமீ வரை இருந்தால் ஒரு நாள் விடுமுறை, 100 - 150 கி.மீ தூரம் என்றால் ஒன்றரை நாள் விடுமுறை, 150 கி.மீ.க்கு மேல் இருந்தால் இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்படுவது கட்டாயமாகும்.

மேலும், பணியிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள சில வாக்காளர்களுக்கு வாக்களிக்க மூன்று நாட்கள் தேவைப்பட்டால் அதற்குத் தேவையான மூன்று நாள் விடுமுறையையும் நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

அத்துடன், பல்கலைக்கழகங்களின் பணியாள் குழுவினரும், மாணவர்களும் வாக்களிப்பதை இலகுபடுத்தும் வகையில் விடுமுறை வழங்கக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 5 ஆயிரத்தை நெருங்கும் தேர்தல் விதிமுறை மீறல்!

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு வரை 4 ஆயிரத்து 945 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 515 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 3 ஆயிரத்து 289 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 33 முறைப்பாடுகளும் 107 ஏனைய விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (ஐ)



# 3 வாகனங்கள் மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்

கொழும்பு, செப். 20

அக்குரஸ்ஸ - தெனியாய வீதியில் ஹூலங்தாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் பயணித்த மற்றுமொரு பஸ்ஸை கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்றபோது எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# தேர்தல் காலத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும் வகையில் நேற்று முதல் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதற்கான திட்டம் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள விசேட தேர்தல் கூட்டு அனர்த்த செயற்பாட்டுப் பிரிவின் ஊடாக இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

ஏதேனும் அனர்த்த சூழ்நிலை காரணமாக தேர்தல் கடமைகள் அல்லது வாக்களிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 117க்கு அழைக்க முடியும்.

இல்லையெனில், 0113668032, 0113668087 அல்லது 0113668025 ஆகிய சிறப்பு அவசர இலக்கங்களுக்கு அழைக்க முடியும்.

இந்த விசேட கூட்டு அவசர பிரிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாளை மறு தினம் வரை இயங்கும்-என்றார். (அ)

# புத்தளத்தில் ஒருதொகை கிருமிநாசினி சிக்கியது!

சிலாபம், செப். 20

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட ஒரு தொகை கிருமிநாசினி நேற்று முன்தினம் கடற்படையால் கைப்பற்றப்பட்டது. அத்துடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - உச்சமுனை தீவில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த படகிலேயே இந்த கிருமிநாசினிகள் சிக்கின.

11 உரப்பைகளில் கிருமிநாசினிகள் மூடையாகக் கட்டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. இந்த கிருமிநாசினிகளை கொண்டு வந்த படகின் உரிமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கிருமிநாசினிகள் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சு. க. அமைப்பாளர் கொலை; சந்தேகநபர் நேற்று கைது!

கொழும்பு, செப். 20

சுதந்திர கட்சியின் காலி மாவட்ட ஹினிதும தொகுதி அமைப்பாளர் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கலவானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# காற்றின் வேகம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 20

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் காங்கேசன் துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது மணிக்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்க கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வரையிலும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு - காங்கேசன் விசேட ரயில் சேவைகள்!

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி தேர்தல் கடமைகளை இலகுவாக்கும் வகையில் கொழும்பு - காங்கேசன்துறை இடையே விசேட ரயில் சேவைகளை அறிவித்துள்ளது புகையிரதத் திணைக்களம்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்காக இந்த விசேட ரயில் சேவை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறைக்கு ரயில் புறப்படும்.

இதேபோன்று, நாளையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டைக்கு இரண்டு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் நாளான 21 ஆம் திகதி சனிக்கிழமை வழமையான நேர அட்டவணையில் ரயில் சேவை இயக்கப்படும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறுந்தூர ரயில் சேவைகள் குறைக்கப்படலாம். ஆனால், நீண்ட தூர ரயில் சேவைகள் வழமை போன்று இயங்கும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# போதைப்பொருளுடன் 2 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப். 20

கொழும்பில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் வெவ்வேறு இடங்களில் இருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

கிராண்ட்பாஸில் 17 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்த 53 வயது நபராவார்.

இதேபோன்று, 13 கிராம் ஹெரோயினுடன் கல்கிசையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 37 வயதுடையவர் என்று தெரிய வந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருகோணமலையில் மட்டும்

# 4,000 அரச ஊழியர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவர்

திருகோணமலை, செப். 20

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 4000 அரச ஊழியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு உரிய பயிற்சிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதுடன் இம்முறை தேர்தல் முறைப்பாடுகளாக திருகோணமலை மாவட்டத்தில் நேற்று 19 ஆம் திகதி காலை 9 மணிவரை 56 முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன என்றும் அவர் கூறினார்.

# திடீரென ஓட்டோ தீக்கிரை மட்டக்களப்பில் சம்பவம்!

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு, வவுணதீவிலிருந்து விளாவெட்டுவானுக்குச் செல்லும் வீதியில் வாகனக் கோளாறினால் ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)







# காயத்திரி மந்திர மகா யாகம்

அம்பாறை, வீரமுனை பகவான் சிறீ சத்ய சாயி சேவா நிலையத்தில் பிரசாந்தி நிலையம் புட்டபர்த்தியில் இருந்து பகவான் சிறீ சத்ய சாயி பாபாவின் அரவணைப்பில் 50 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வரும் வேத விற்பனர் சிறீ வேத நாராயணனால் வீரமுனை பகவான் சிறீ சத்ய சாயி சேவா நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட ஓம குண்டத்தில் காயத்திரி மந்திர மகா யாகம் நடைபெற்றது.

இந்த வழிபாட்டில் திருக்கோவில், அக்கறைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, வெல்லாவெளி, பாண்டிருப்பு போன்ற இடங்களிலிருந்து சிறீ சத்ய சாயி பாபாவின் பக்தர்கள் உட்பட ஏனைய இந்து மத பக்தர்களும் கலந்து கொண்டு சிறீ சத்ய சாயி பாபாவின் அருளையும், ஆசியையும் பெற்றுக் கொண்டனர்.

கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதம், சிறீ சத்ய சாயி பாபாவின் உருவப்படமும், பிரசாந்தி நிலையம் புட்டபர்த்தியில் இருந்து கொண்டு வரப்பட்ட குங்குமமும் வழங்கப்பட்டன. (எ)

# களுவாஞ்சிக்குடியில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு விழா





காரைதீவு, செப். 21

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகமானது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் ஆன்மீக விருந்தினராக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் மற்றும் சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் கலந்து சிறப்பித்தனர்.

களுவாஞ்சிக்குடி மாணிக்க பிள்ளையார் ஆலய முன்றலில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலமானது பிரதான வீதியூடாக பிரதேச செயலகத்தை அடைந்ததும், சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் அவர்களால் சுவாமி விபுலானந்தரின் திருவுருவத்துக்கு மாலை அணிவித்தல் மற்றும் பூஜை நிகழ்வுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கதாப் பிரசங்கம், பேச்சு, பாடல், நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே. ஜெயராஜினால் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தினம் தொடர்பான விசேட ஆன்மீக சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.

மேலும், இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஆலயங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும் திருகோணமலை மாவட்டத்தில் தயார்

## தெரிவத்தாட்சி அலுவலர் சாமிந்த தெரிவிப்பு

திருகோணமலை, செப். 20

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு திருகோணமலை தேர்தல் மாவட்டத்துக்கான அனைத்து ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"திருகோணமலை, மூதூர், சேருவில ஆகிய தேர்தல் தொகுதிகளைக் கொண்ட திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை மொத்தமாக 3 இலட்சத்து 15 ஆயிரத்து 925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் திருகோணமலை தேர்தல் தொகுதி - 105005 மூதூர் தேர்தல் தொகுதி - 123363 சேருவில தேர்தல் தொகுதி - 87557 ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளிலும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் வாக்களிப்பு நிலையங்களாக 318 வாக்களிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் திருகோணமலை தேர்தல் தொகுதியில் 106 வாக்களிப்பு நிலையங்களும் மூதூர் தேர்தல் தொகுதியில் 114 வாக்களிப்பு நிலையங்களும் சேருவில தேர்தல் தொகுதியில் 98 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.



வாக்கு எண்ணும் நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரியும் காணப்படுகின்றது" - என்றார். (எ)

# ஜனாதிபதி தேர்தல் அன்று 3,000 கண்காணிப்பாளர்கள்

## கபே அமைப்பு களமிறக்கும்

மட்டக்களப்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று அதாவது செப்ரெம்பர் 21 ஆம் திகதி 3000 கண்காணிப்பாளர்களை கபே அமைப்பு பணியில் ஈடுபடுத்தவுள்ளது என்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் - கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"கபே அமைப்பு ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை கபே அமைப்புக்கு 934 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றது தொடர்பாக அவதானிக்க கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டுமாவடி பிரதேசங்களில் தேர்தல் வன்முறை சம்பவங்கள் அதிகரிக்கலாம் என்ற சூழ்நிலை இருந்தபோதிலும் இதுவரை எந்தவொரு பாரிய வன்முறைகளும் இடம்பெறவில்லை. செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் தினத்தில் 3000 கண்காணிப்பாளர்களை கபே அமைப்பு பணியில் ஈடுபடுத்தவுள்ளது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் திடீரென வெடித்து சிதறும் தொலைத்தொடர்பு சாதனங்கள்

## 30 பேர் பலி, 3250 பேர் படுகாயம்
## அச்சத்தில் உறைந்த லெபனான்

பெய்ரூட், செப். 20

**லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஒரே நேரத்தில் பல இடங்களிலும் வாக்கி - டாக்கிகள், சூரிய சக்தியில் இயங்கும் தொலைத்தொடர்பு சாதனங்கள் வெடித்ததில் 30இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 3250இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.**

லெபனானில் பேஜர்கள் வெடித்த சம்பவத்தை தொடர்ந்து நேற்று முன்தினம் அதே பாணியில் வாக்கி - டாக்கிகள் உள்ளிட்ட மின்சாதன பொருட்கள் வெடித்துச் சிதறின. இந்தச் சம்பவம் அந்த நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த வாக்கி - டாக்கிகள் அனைத்துமே ஈரான் ஆதரவு கொண்ட ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்தியது எனக் கூறப்படுகிறது. ஒரே நேரத்தில் பல இடங்களில் வாக்கி - டாக்கிகள் வெடித்த நிலையில் அவற்றில் ஒன்று முந்தைய நாள் பேஜர் தாக்குதலில் உயிரிழந்த ஹிஸ்புல்லா இயக்கத்தைச் சேர்ந்தவரின் இறுதிச் சடங்கு நிகழ்வின் போது வெடித்தது.

பேஜர், வாக்கி - டாக்கி என அடுத்தடுத்து தாக்குதல்கள் நடக்க இஸ்ரேல் தான் காரணம். இதற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று லெபனான் கூறி வரும் நிலையில் இது குறித்து இஸ்ரேல் மௌனம் சாதித்து வருகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலின் கண்காணிப்பில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வழக்கொழிந்த பழைய தொழில்நுட்ப சாதனங்களான பேஜர்கள், வாக்கி - டாக்கிகளை பயன்படுத்திவரும் நிலையில் இந்த மிகப்பெரிய தாக்குதல் நடந்துள்ளது.

இந்த வாக்கி - டாக்கிகள் அனைத்துமே 5 மாதங்களுக்கு முன்னர் வாங்கப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில் தான் வெடித்துச் சிதறிய பேஜர்களும் வாங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறிய பேஜர்கள் அனைத்தும் தாய்வான் தயாரிப்பு என்று கூறப்படுகிறது. ஆனால், தாய்வான் இதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது. எனினும், இந்தத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் இருப்பதாக பல்வேறு பிரபல ஊடகச் செய்திகளும் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இஸ்ரேல் காஸா மீது தாக்குதல் நடத்திவரும் நிலையில், பேஜர், வாக்கி - டாக்கிகள் வெடித்துச் சிதறிய சம்பவம் இஸ்ரேல் - ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாக்கள் இடையே நேரடி மோதலுக்கு வழிவகுக்கும் என்று சர்வதேச போர் நிலவர நிபுணர்கள் எச்ச ரித்துள்ளனர். (எ)



## 12 பேர் பலி! இஸ்ரேலின் சதி அம்பலம்

பெய்ரூட், செப். 20

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்திய 5,000 பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்து சிதறியதில் 12 பேர் உயிரிழந்தனர். சுமார் 4, 000 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் சதி இருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

பேஜரில் இஸ்ரேலின் மொசாட் அமைப்பினர் வெடிக்கும் போர்ட் என்ற சாதனத்தை பொருத்தியுள்ளனர். அதில், 3 கிராம் அளவுக்கு வெடிமருந்தை நிரப்பியுள்ளனர். பேஜர்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயே இந்த வெடிமருந்து நிரப்பப்பட்டுள்ளது. பேஜரில் கடவுச்சொல் வந்தவுடன் வெடிக்கும் வகையிலான சாதனமாகும் இது. 5 ஆயிரம் பேஜர்களில் இந்த சாதனம் பொருத்தப்பட்டிருந்தது. இதன்படி, பேஜரின் திரையில் கடவுச்சொல் வந்துள்ளது. இதையடுத்து, உடனடியாக சூடான பேஜர்கள் அடுத்த சில வினாடிகளில் வெடித்து சிதறின. (எ)

# 3,600 வகை இரசாயனம் மனித உடலில் கலப்பு!

சூரிச், செப். 20

பிளாஸ்ரிக், காகிதம், கண்ணாடி, உலோகம் உள்ளிட்டவற்றில் உள்ள இரசாயனங்கள் உணவுப் பண்டங்களில் கண்ணுக்குத் தெரியாமல் கலந்து வருவது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து சுவிட்சர்லாந்து சூரிச் நகரில் உள்ள உணவுப் பொதிகள் கூட்டமைப்பு அறக்கட்டளையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் பிர்கிட் கியூக்கி தெரிவித்தவை வருமாறு, “உணவுடன் தொடர்புடைய இரசாயனங்களில் 100 வகை இரசாயனங்கள் மனித ஆரோக்கியத்துக்கு மிகவும் ஆபத்தானவையாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒட்டாமல் சமைக்க உதவும் பாத்திரங்களில் பூசப்படும் பி .எப். ஏ. நுண்பொருட்கள், குளிர்பானங்கள் உள்ளிட்ட உணவுப் பண்டங்களை பொட்டலம் போடத் தயாரிக்கப்படும் பிளாஸ்ரிக் குடுவைகளில் உள்ள பிஸ்பெனால் ஏ உள்ளிட்டவை மனித உடலில் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. இவை மட்டுமல்லாமல் உணவை உட்கொள்ளும்போது நம் உடலில் வேறு பல இரசாயனங்கள் கலக்கின்றன. இந்த கோணத்தில் ஆராய்ந்தபோதுதான் 3,601 விதமான இரசாயனங்கள் உணவு வழியாக மனித உடலில் கலப்பது கண்டுபிடிக்கப்பட்டது”- என்றார். (எ)

# இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நாவில் புதிய தீர்மானம் நிறைவேறியது

## 43 நாடுகள் முற்றாக புறக்கணிப்பு

நியூயோர்க், செப். 20

பலஸ்தீனத்தில் சட்டவிரோதமாக இருப்பதை இஸ்ரேல் ஓராண்டுக்குள் முடிவுக்கு கொண்டுவர கோரும் தீர்மானத்தை இந்தியா உள்ளிட்ட 43 நாடுகள் புறக்கணித்தன. இருப்பினும் 124 வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேறியது.

காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி வருகிறது. மேலும், கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பலஸ்தீனத்தின் பிற பகுதிகளிலும் இந்தத் தாக்குதல் தொடர்கிறது. போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என பல்வேறு நாடுகள் வலியுறுத்திய போதிலும், இஸ்ரேல் தாக்குதலை கைவிடவில்லை. இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் இஸ்ரேலின் நடவடிக்கையை கண்காணித்து வரும் ஐ. நாவின் சிறப்பு அமர்வு புதன்கிழமை நடைபெற்றது. இதில், சட்டவிரோதமான பலஸ்தீன ஆக்கிரமிப்பை ஓராண்டுக்குள் இஸ்ரேல் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 124 நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட 14 நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், ஜேர்மனி, இத்தாலி, நேபாளம், சுவீடன், இங்கிலாந்து உள்ளிட்ட 43 நாடுகள் வாக்களிக்காமல் தீர்மானத்தை புறக்கணித்தன. மேலும், இந்தத் தீர்மானத்தில், பலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.

# வெளிநாட்டு மாணவர்களுக்கு கனடா அரசாங்கம் கெடுபிடி

ஒட்டாவா, செப். 20

தங்கள் நாட்டில் தற்காலிக குடியிருப்பு வாசிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் அனுமதியை குறைக்கும் வகையிலான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது கனடா அரசாங்கம். இது இந்தியர்களை பெருமளவு பாதிக்கச் செய்யும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் அனுமதி என்று மட்டும் இல்லாமல் வெளிநாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கான அனு



மதியளிக்கும் விதிகளிலும் சில மாற்றங்களை அந்த நாட்டு அரசு மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

“இந்த வருடம் 35 சதவீதத்துக்கும் குறைவான சர்வதேச மாணவர் அனுமதிகளை நாங்கள் வழங்குகிறோம். அடுத்த வருடம் இந்த எண்ணிக்கை 10 சதவீதம் குறையும். தேசத்துக்கு வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் வருவது பொருளாதாரத்துக்கு வலுச் சேர்க்கும். அதே நேரத்தில் மாணவர்களை தவறான பாதையில் சிலர் பயன்படுத்திக் கொள்வதை அனுமதிக்க முடியாது. அதனால் தான் வெளிநாட்டவரை அனுமதிப்பதில் விதிகளை மாற்றியுள்ளோம்” என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். (எ)

# “மிகப்பெரிய துஷ்பிரயோகம்” இந்தியாவின்மீது ட்ரம்ப் சாடல்

வாஷிங்டன், செப். 20

“இந்திய - அமெரிக்க வர்த்தக உறவை இந்தியா மிகப்பெரிய அளவில் துஷ்பிரயோகம் செய்கிறது” என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சாடியுள்ளார்.

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அற்புதமானவர். அடுத்த வாரம் அமெரிக்க வரும் அவரை நான் சந்திப்பேன்” என்றும் குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ட்ரம்ப் கூறினார்.

குவாட் உச்சி மாநாடு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மோடி 3 நாட்



கள் பயணமாக அமெரிக்கா செல்கிறார். வரும் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை 3 நாட்கள் அமெரிக்காவில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்த நிலையில், அமெரிக்கா வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்திக்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகள் எண்ணும் நிலையங்களில் 2ஆம் விருப்பத்தேர்வு எண்ண ஏற்பாடு

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 20

**அனைத்து வாக்கு கணக்கெடுக்கும் மையங்களிலும் இரண்டாம் விருப்பத்தேர்வை எண்ணுவதற்கு தேவையான ஏற்பாடுகளை உடனடியாக தயார் செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக் குழு கடிதம் அனுப்பியுள்ளது.**

அதன்படி, கூடுதல் அலுவலர்களைத் தயார்படுத்தும் பணியில் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் வட்டாரத் தேர்தல் அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து கடந்த 10ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கைக்கு தயார் நிலையில் உள்ள வாக்கு எண்ணிக்கை மையங்களின் எண்ணிக்கை 1274 ஆகும்.

இந்நிலையில், வாக்குச்சாவடிகளில் பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# சமூக ஊடகங்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர அவதானம்!

கொழும்பு, செப். 20




சமூக ஊடகங்கள் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

தேர்தல் நாட்களிலும் தேர்தலுக்குப் பின்னரும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சமூக ஊடகங்கள் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டால் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, குறிப்பாக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தனியான சேவை ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் சமூக ஊடகங்கள் ஊடாக எந்தவொரு தகவல் கிடைத்தாலும் அவதானம் செலுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

# தெற்கில் மூன்று இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்!

## மூவர் உயிரிழப்பு! இருவர் காயம்!!

கொழும்பு, செப். 20

நாட்டின் 3 வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகம - மிதிகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 37 வயதான வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் உயிரிழந்தார். இதன்போது காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிக்கவரட்டிய - ரஷ்னாயனபுர பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 30 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கொஹுவல - சரணங்கர வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கையடக்கத்தொலைபேசிகள் பாவித்தல், நிழற்படமெடுத்தல் வாக்கெடுப்பு, வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் தகாதவை

## தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அறிக்கை

கொழும்பு, செப். 20

வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் தவிர்க்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கையடக்கத் தொலைபேசிகளைப் பாவித்தல், நிழற்படமெடுத்தல், வீடியோ எடுத்தல், ஆயுதங்களை தம் வசம் வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் மற்றும் வேறு போதைப் பொருட்களைப் பாவித்தல், மதுபானம் அருந்திவிட்டு அல்லது போதைப்பொருளை பாவித்துவிட்டு வருகைதருதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தங்காலையில் சடலம் மீட்பு!

கொழும்பு, செப். 20

அம்பாந்தோட்டை, தங்காலை - நலகம பொல்தவன சந்தியில் உள்ள தென்னந்தோப்பில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞன் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் இரவு சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை - நலகமவை வசிப்பிடமாகக் கொண்ட 33 வயதான தேஷான் எரந்த என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாடு கட்டச்சென்ற இளைஞன் வீடு திரும்பாத நிலையில், குடும்பத்தினர் தேடியபோது சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம்தொடர்பில்தங்காலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்களிப்பு நிலையங்களுக்குள் பிரவேசிப்போர் குறித்து அறிக்கை

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படுபவர்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் விசேட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசிக்க சட்டத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய கடமைகளில் ஈடுபட்டிருக்கும் பொலிஸ் அலுவலர்கள், போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் முகவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் பெரும்பாக முகவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக முறைப்படி நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற ஒழுங்கமைப்புகளின் முகவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதிபெற்ற அலுவலர்களுக்கும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு; 3பேர் உடனடியாக பணி இடைநீக்கம்

கொழும்பு, செப். 20

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரத்துடன் தொடர்புடைய மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் இரத்மலை திஸ்ஸ கல்லூரியின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த மண்டபத் தலைவர் உட்பட மூவரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ சமரக்கோன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மண்டபத் தலைவர் உள்ளிட்ட மூவரிடமும் மாகாணக் கல்வித் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

பரீட்சை நிலையத்தில் இருந்த உதவி அதிபர் ஒருவராலேயே ஆசிரியர் குழுவுக்கு வினாத்தாள் பகிரப்பட்டதாக தெரியவந்தது.

இதன்படி, அந்த பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த பரீட்சை நிலையத் தலைவர், உதவித் தலைவர் மற்றும் ஆசிரியர் ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டு அவர்கள் மீது மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# முதலாம் வினாத்தாள் இரத்தாகுமா? இதுவரை எந்தத் தீர்மானமும் இல்லை

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கருத்து

கொழும்பு, செப். 20

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளை இரத்து செய்வது தொடர்பில் இதுவரை எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் உரிய விசாரணை முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வினாக்களை நீக்குவதால் தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாகத் தெரிவித்து சில பெற்றோர்கள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு முன்பாக நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் வட்ஸ்அப் செயலி மூலம் ஆசிரியர் ஒருவரால் பகிரப்பட்டதாகப் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களினால் முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, குறித்த வினாத்தாளைத் தயாரித்த பரீட்சை சபையுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் கருத்துரைத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், 3 வினாக்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், குறித்த நடவடிக்கையினால் தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாகத் தெரிவித்துப் பெற்றோர்களினால் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.




இதன்போது, அண்மையில் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையினை இரத்து செய்யுமாறும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த பின்னணியிலேயே, குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்குப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெற்றோர்களுக்குப் பரீட்சைகள் ஆணையாளரினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இந்த சந்திப்பின் பின்னர், செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், குறித்த பரீட்சை தொடர்புடைய பல வினாக்கள் வெளியானதாக மாணவர்களின் பெற்றோர் தமது கவனத்திற்கு கொண்டு வந்ததாக குறிப்பிட்டார்.

இந்த நிலையில், உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்காக...

மற்றும் வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்கள் தமது அன்றாட செயல்பாடுகளை வழமைபோன்று ஆற்றுவதற்கான சூழலை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கிளிநொச்சி...

இளைஞன் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் பன்னங்கண்டி பகுதியைச் சேர்ந்த 22 வயதான அந்தோனி அல்பிரட் - அனுஷன் என்பவர் உயிரிழந்துள்ளார். (அ)

## 1,750கோடி...

உரித்தாளர்களான 10 முக்கிய தரப்பினரை உள்ளடக்கியிருக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவின் நிர்வாகக்குழு கடந்த ஜூன் 27 - 28ஆம் திகதிகளில் பாரிஸில் கலந்துரையாடலை நடத்தியிருந்தது.

இவற்றைத் தொடர்ந்து, கடந்த ஜூலை முற்பகுதியில் கடன் ஸ்திரத்தன்மை குறித்த சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கைக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவினருக்கும் இடையில் 370 கோடி டொலர்கள் பெறுமதியான - மொத்த சர்வதேச கடன்களில் ஆயிரத்து 250 கோடி டொலர்கள் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகளை மறுசீரமைக்கவும் ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித்...

நள்ளிரவு முதல் நாளை வரை அமைதி காலமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, வாக்காளர்கள் விரும்பிய வேட் பாளரின் பெயர் மற்றும் அவரின் சின்னத்துக்கு அருகில் புள்ளடியிட்டு தமது வாக்குகளை அளிக்க முடியும்.

இதேபோன்று விருப்பு வாக்குகளை செலுத்துவதாயின் 1, 2, 3 என்று இலக்கங்களை பயன்படுத்தியே வாக்களிக்க முடியும்.

புள்ளடியையும் இலக்கத்தையும் இட்டால் அது நிராகரிக்கப்பட்ட வாக்காகக் கருதப்படும். இதேபோன்று தபால் மூல வாக்களிப்புகளை எண்ணும் பணிகள் 4.15 மணியளவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அவற்றை ஊடகங்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வாக்கெண்ணும் பணிகளைத் தொடர்ந்து இறுதி முடிவுகளுக்கு அமைய வேட்பாளர் ஒருவர் 50சதவீத வாக்குகளை பெற்றுள்ளாராயின் அத்துடன், வாக்கெண்ணும் பணிகள் நிறைவடையும். ஒரு வேட்பாளருக்கேனும் 50 வீத வாக்குகள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் விருப்பு வாக்குகளை எண்ணும் நிலை ஏற்படும். இது, முதலாம் இரண்டாம் விருப்பு வாக்குகளை பெற்ற வேட்பாளர்களை முன்னிலைப்படுத்தியே மேற்கொள்ளப்படும். அதன் இறுதியில் விருப்பு வாக்குகளும் இணைத்துக் கொள்ளப்பட்டமையை தொடர்ந்து அதிக வாக்குகளை பெற்றுக்கொண்டவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் - என்றார். (ஐ)

# வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தத்தில் கடலில் மாயமானவர் மீட்கப்படவில்லை!

வடமராட்சி, செப். 20

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத்துக்கு சென்று கடலில் நீராடிய போது காணாமல் போனவர் நேற்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, கடலில் நீராடிய அம்பனை சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது-54) என்பவர் உயிரிழந்தார்.

அன்றைய தினம் சாவகச்சேரி - நுணா விலை சேர்ந்த தயாசீலன் வைஷ்ணவன் (வயது -28) என்பவர் கடலில் நீராடியபோது காணாமல் போயிருந்தார்.

அவர் தனது தாயருடன் ஆலயத்துக்கு சென்றிருந்தநிலையில், தாயரிடம் உடைமைகளை ஒப்படைத்து விட்டே கடலில் நீராடினார் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் வரை காணாமல் போனவரை தேடும் பணி தொடர்ந்த போதும் அவர் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

# 40 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு!



கொழும்பு, செப். 20

வைத்தியசாலைகளுக்கு தேவையான 40 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இந்த நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 300 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் இதுவரையில் அவை விநியோகிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வெளிப்படையான முறையில் கடுமையான விதிமுறைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தொடர்ந்தும் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கப்படும் என சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜயசூரிய தெரிவித்தார்.

## அமைதியான...

முடியும் என்று சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைவர் புவட் தௌபீக் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. தேர்தல் கண்காணிப்பு பணிகளை முன்னெடுப்பதற்காக வழமைபோன்று சர்வதேச நாடுகளை சேர்ந்த கண்காணிப்பாளர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புவட் தௌபீக் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் அயலக மற்றும் நட்பு நாடுகள் என்ற ரீதியில் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்யும் நோக்கில் பரந்துபட்ட கண்காணிப்பு பணிகளை முன்னெடுப்பதற்காகத் தாம் வருகைதந்திருப்பதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்கள் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கண்காணிப்பு பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

நாளை நடைபெறவுள்ள தேர்தலில் சகல வாக்களாளர்களும் எந்தவொரு வெளியகத் தரப்பினரதும் அழுத்தங்களின்றி வாக்களிக்கவேண்டும். தேர்தல் என்பது மிகப்பரந்துபட்ட செயன்முறையாகும். அதுகுறித்த சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. எனவே, சகல தரப்பினரும் சட்டத்துக்கு மதிப்பளித்து, தத்தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்றுவதன் ஊடாக அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தமுடியும் - என்றும் கூறினார். (ஐ)

# மீன் விற்பனை நிலையத்தில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, செப். 20

மீன் விற்பனை நிலையத்தில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை - மிதிகம பகுதியில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர் 37 வயது நபராவார்.

இந்தச் சம்பவத்தில் மீன் வாங்க வந்த இருவர் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீன் விற்பனை நிலையமொன்றிற்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்திருந்த இனந்தெரியாத இருவர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள பாதாள உலக கும்பலை சேர்ந்த நபர் ஒருவரே இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி; சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, செப். 20

கொழும்பு - கொஹூவலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொஹூவலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவை பிரதேசத்தை சேர்ந்த 25 மற்றும் 30 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொஹூவலையில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் கடை ஒன்றுக்குள் நுழைந்து அதன் உரிமையாளரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் காயமடைந்தவர் களுபோவிலை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

# வீதி விபத்துகளில் சிக்கி ஆறு பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, செப். 20

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் நாடு முழுவ தும் இடம்பெற்ற வீதி விபத்து களில் 6 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாறை - காரைதீவில் இடம்பெற்ற விபத்தில் 14 வயது சிறுமி உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

ஓமந்தையில் வீதியில் நின்ற வரை மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

நேற்று அதிகாலை கிளி நொச்சியில் இடம்பெற்ற விபத் தில் 22 வயது இளைஞர் உயிரிழந்தார்.

இதேபோன்று, கம்பஹா - மினுவாங்கொடையில் பெண் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் உயிரிழந் தார்.

கண்டி - யாழ்ப்பாணம் வீதி யில் அநுராதபுரத்தில் பாதசாரி ஒருவர் மீது கார் மோதிய விபத்தில் 71 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

## தேர்தல்...

ஆரம்பம், வாக்குகள் எண்ணப்படுதல் போன்றவற்றிலும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி தலைமை கண்காணிப்பாளர் இன்டா லசே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குறுகிய கால கண்காணிப்பாளர்கள் இரு குழுக்களாக செயல்படுவார்கள். அவர்கள் தங்கள் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தில் நடைபெறவுள்ள செயல்பாடுகள் தொடர்பில் போதிய விளக்கங்களை பெற்றுள்ளனர்.

26 கண்காணிப்பாளர்களை ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தியுள்ளோம். அவர்கள் கடந்த ஒகஸ்ட் 29 முதல் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தேர்தல் முன்னெடுப்பு மற்றும் பிரசாரப் பணிகளை கண்காணித்தனர் என்றும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கில்...

காணியில் சூரிய மின்கல பூங்காவை நிர்மாணிக்கவுள்ளது. இதற்கான காணி முழுமையாக விடுவிக்கப்படவேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## திலீபன்...

ஆவண காட்சியகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த ஆவண காட்சியகத்தில் தியாக தீபம் திலீபனின் வரலாறு மற்றும் புகைப்படங்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு உங்கள் உரிமை கட்டாயம் பயன்படுத்துக!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் கோரிக்கை



கொழும்பு, செப். 20

"வாக்கு உங்கள் உரிமை, பலம். அதனை கட்டாயம் பயன்படுத்துங்கள்." - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல்.ரத்நாயக்க.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, நாளை சனிக்கிழமை இயலுமானவரை காலை வேளையிலேயே சென்று வாக்குரிமையை பயன்படுத்திவிடுங்கள்.

வாக்களித்த பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். தேர்தல் விதிமீறல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம். அவ்வாறு செய்தால் பொலிஸாரால் கைது செய்யப்படக்கூடும் - என்றார். (அ)

## ஊரடங்கு சட்டம் தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார்!

பிரதிப் பொலிஸ் மா அதிபர்



கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த நேர்ந்தால், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிக்க முடியும் என்றும் பொலிஸாருக்கோ பாதுகாப்பு பிரிவினருக்கோ அது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.(அ)

## வாக்களிப்பு தினமான நாளை அநாவசியமாக நடமாட தடை!

கொழும்பு, செப். 20

வாக்களிப்பு தினத்தன்றும் வைக்களிப்பின் பின்னரும் வெளியில் நடமாடுவதை தவிர்க்குமாறும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

வீடுகளிலேயே இருக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அவசியமின்றி பெரிய திரைகளில் தேர்தல் முடிவுகளை அவதானிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒன்றுக்கூடி தேர்தல் முடிவுகளை பார்வையிட்டு மகிழ்ச்சி கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் அவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

அவசர நிலைமைகளில் முப்படையினர் அழைக்கப்படுவார்கள் என தேர்தல் ஆணைக்குழு அறிவித் துள்ளது. (அ)

## நாளையும் நாளை மறுதினமும் மதுபானசாலைகள் மூடப்படும்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் தினமான நாளையும் நாளை மறுதினமும் நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்று மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம். ஜீ. குணசிறி தெரிவித்துள்ளார். (ஐ)

## 900 வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காதவர் பணிநீக்கம்!

கொழும்பு, செப். 20

900 வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காமல் வைத்திருந்த தபால் உத்தியோகத்தரை உடனடியாக பணி இடைநிறுத்தம் செய்ய தபால் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

களுத்துறையில் பயாகல, அயகம கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காமல் வைத்திருந்தவரே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து பிரதேச மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர் விநியோகிக்காமல் வைத்திருந்த 900 வாக்காளர் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் பயாகல உப தபால் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## சுவிற்சர்லாந்தில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கையர்!

சூரிச், செப். 20

சுவிற்சர்லாந்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை இலங்கையைச் சேர்ந்த ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது கொலையாக இருக்கலாமென சந்தேகிக்கப்படும் நிலையில், அந்த நபருடன் தங்கியிருந்த இரண்டு சுவிற்சர்லாந்து ஆண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


கிளாட்ப்ரூக் என்ற இடத்தில் உள்ள தொடர்மாடியில் குறித்த சம்வம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவசர சேவை மையத்திற்கு கிடைத்து அழைப்பின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பாதிக்கப்பட்டவரை காப்பாற்ற முயற்சித்தனர். எனினும், அந்த முயற்சி வெற்றியடையவில்லை. இலங்கையைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்தார். சம்பவ இடத்தில் 40 மற்றும் 54 வயதுடைய இரண்டு சுவிஸ் ஆண்களை சூரிச் கன்டோனல் பொலிஸார் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட நபருடன் அவர்கள் குடியிருப்பில் இருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த மரணத்திற்கான சரியான காரணம் என்ன என்பது தொடர்பான, சூரிச் பொலிஸ் மற்றும் உள்ளூர் வழக்கறிஞர் அலுவலகத்தால் மேலதிக விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்தில் தடயங்களை சேகரித்து விசாரணை நடத்தி வருகின்றனர், மேலும் வழக்கு வெளிவரும் போது மேலும் விவரங்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மட்டக்களப்பில் தேர்தல் பணியில் 6,750 அரச உத்தியோகத்தர்கள்!



மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காகவும் வாக்கண்ணும் பணிகளுக்காகவும் 6,750 அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் எம். பி. எம். சுபியான் தெரிவித்தார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும்,

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாந்தீவு மருத்துவமனையில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் இம்முறை மட்டக்களப்பு புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் மண்டபம் இலக்கம் மூன்றில் வாக்களிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கையில் ஆகக் குறைந்த அதாவது இரண்டு பேர் வாக்களிப்பதற்கான நிலையமாகும்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பதற்கான வாக்குப்பெட்டிகள் வெள்ளிக்கிழமை காலை 7:00 மணி முதல் மட்டக்களப்பு தேர்தல் மத்திய நிலையமாக விளங்கும் மட்டக்களப்பு இந்து கல்லூரிகளில் இருந்து விநியோகிக்கப்படும்.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காகவும் வாக்கண்ணும் பணிகளுக்காகவும் 6,750 அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தமாக 1,514 பொலிஸார் உள்ளிட்ட விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட உள்ளனர். இதுவரையிலும் வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள் நேரடியாக தபால் நிலையங்களுக்கு சென்று வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஐ)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை!

கொழும்பு, செப். 20

இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கோரிக்கைக்கு அமைய கல்வி அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி பாடசாலை மீள ஆரம்பிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலக்கை எட்டியது சிறுபோக அறுவடை!



கொழும்பு, செப். 20

2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடையில் எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு சிறுபோக நெல் அறுவடை 26 இலட்சம் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

கடந்த சிறுபோகத்தின் போது 20 இலட்சம் தொன் நெல் அறுவடை பதிவு செய்யப்பட்டிருந்ததாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சட்டவிரோத மீன்பிடி 8 பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், செப். 20

வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 17 முதல் 45 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.